UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - OCTOBER 2019
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2019 ஒக்டோபர்

**TAMIL - III / தமிழ் - III (TG III)**

# சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக் கோட்பாடுகளும்

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து** (10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இரு** வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

(நேரம் : மூன்று மணித்தியாலம்)

---

## பகுதி I

01. சோழர்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்துறை இலக்கிய வளர்ச்சியினை மதிப்பிடுக.

02. விஜயநகர நாயக்கர் காலத்தில் பொதுமக்கள் சார்பான இலக்கிய வளர்ச்சி பற்றி விளக்கிக் காட்டுக.

03. ஐரோப்பியர் காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கில் காணத்தகும் புதிய மாற்றங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.

04. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாவல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கினைப் பரிசீலிக்குக.

ம.ப.பா.

05. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) கம்பர்

(ஆ) வில்லிபுத்தூரர்

(இ) வீரமாமுனிவர்

(ஈ) பாரதி

## பகுதி II

06. “இலக்கியத் திறனாய்வாளன் படைப்பாளிக்கும், வாசகனுக்கும் இடையே ஒரு சிறந்த தொடர்பாளனாக விளங்குகிறான்.” இக்கூற்றின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்க.

07. “இலக்கியத்துறை வளர்ச்சியும், திறனாய்வுத்துறை வளர்ச்சியும் இணைந்து செல்லும் போதே சிறந்த இலக்கிய வளம் ஏற்படுகின்றது.” : கருத்துரை வழங்குக.

08. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளில் அவயவிக் கொள்கையையும், சமுதாயக் கொள்கையையும் ஒப்பிட்டு விளக்குக.

09. நீர் அண்மையில் வாசித்த சிறுகதைத் தொகுதி ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

**புள்ளி அளவில் ஒரு பூச்சி**

புத்தகமும் நானும்,
புலவன் எவனோதான்
செத்த பின்னும் ஏதேதோ சேதிகள் சொல்ல,
மனம்
ஒத்திருந்த வேளை!

ம.ப.பா.

ஒழுங்காக அச்சடித்த
வெள்ளைத்தாள் மீதில்,
வரியின் முடிவினிலே,
பிள்ளைத் தனமாய்ப் பிசகாகப் போட்டகாற்
புள்ளியைக் கண்டு
புறங்கையால் தட்டினேன்

நீ இறந்துவிட்டாய்!
நெருக்கென்ற தென்நெஞ்சு.

வாய் திறந்தாய், காணேன்,
வலியால் உலைவுற்றுத்
'தாயே!' என அழுத
சத்தமுமே கேட்கவில்லை.

கூறிட்டதுண்டுக் கணத்துள் கொலையுண்டு
ஓர்
கீறாகத் தேய்ந்து கிடந்தாய்,
அக்கீறுமே
ஓரங்குலம் கூட ஓடி இருக்கவில்லை.

காட்டெருமை காலடியிற்
பட்ட தளிர் போல,
நீட்டு ரயிலில்
எறும்பு நெரிந்தது போல்,
பூட்டாநம் வீட்டிற் பொருள்போல
நீ மறைந்தாய்

ம.ப.பா.

மீதியின்றி நின்னுடைய
மெய் பொய்யே ஆயிற்று,
நீதியன்று நின்சா,
நினையாமல் நேர்ந்ததிது,
தீதை மறந்துவிட மாட்டாயோ சிற்றுயிரே!

காதில் அப்பூச்சி கதை ஒன்றே வந்துவந்து,
மோதிற்று;
மீண்டும் படிக்க முடியவில்லை.
பாதியிலே பக்கத்தை மூடிப்
படுத்துவிட்டேன்.